செ.வெ.எண் : 59 நாள் : 21.08.2021

தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் அலுவலக உதவியாளர் நிரந்தர காலிபணியிடங்கள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. என மாவட்ட ஆட்சித்தலைர் மரு.கி.செந்தில்ராஜ்,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

---

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் தூத்துக்குடி மாவட்டத்தில் காலியாகவுள்ள 2 அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கான நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளது.

அலுவலக உதவியாளர் பதவிகளுக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். வயதுவரம்பு 01.07.2021 அன்றுள்ளபடி கணக்கிடப்படும். சம்பளவிகிதம்: ரூ.15700-50000

| | | |
|---|---|---|
| 1. | பொதுப் போட்டி (பெண்கள் ஆதரவற்ற விதவை முன்னுரிமையற்றவர்)<br>வயதுவரம்பு 18 முதல் 30 வரை | 1 |
| 2. | ஆதிதிராவிடர் (முன்னுரிமை பெற்றவர்)<br>வயதுவரம்பு 18 முதல் 35வரை | 1 |

மேற்கண்ட பணிடங்களுக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட முகவரியில் விண்ணப்பங்களை நேரில் பெற்று உரிய நகல் ஆவணங்களுடன் 15.09.2021 அன்று மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பங்களை கீழ்க்கண்ட முகவரியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்), 166,வடக்கு கடற்கரை சாலை, திரேஸ்புரம், தூத்துக்குடி- 628001. தொலைபேசி எண்: 0461-2320673 முகவரியில் சமா்ப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நேர்முகத் தேர்விற்கான இடம் மற்றும் நாள் குறித்து விண்ணப்பதாரா்களுக்கு பின்னா் தெரிவிக்கப்படும்.

**வெளியீடு:- செய்திமக்கள் தொடர்புஅலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**